**செய்தி வெளியீடு எண்: 132** **நாள்: 22.02.2018**

## செய்தி வெளியீடு

2011ம் ஆண்டு சட்டமுறை எடையளவு (பொட்டலப் பொருட்கள்) விதிகளின் படி வியாபாரத்திற்காக தயாரிக்கப்படும் பொட்டலப் பொருட்கள் மீது கீழ் காணும் விவரங்கள் கண்டிப்பாக குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

1. விதி 6 (1) (a) - தயாரிப்பவர் / பொட்டலமிடுபவர் பெயர், முழு முகவரி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு எண், மின் அஞ்சல் முகவரி
2. விதி 6 (1) (b) - பொருளின் பெயர்
3. விதி 6 (1) (c) - பொருளின் நிகர எடை / எண்ணிக்கை
4. விதி 6 (1) (d) - பொட்டலமிடப்பட்ட மாதம் மற்றும் வருடம்
5. விதி 6 (1) (e) - அதிகபட்ச சில்லரை விற்பனை விலை (அனைத்து வரிகள் உட்பட)

மேலும் எந்தவொரு மொத்த வியாபாரியோ அல்லது சில்லரை வியாபாரியோ எந்தவொரு பொட்டலப் பொருளையும் அதில் குறிப்பிட்ட விலைக்கு அதிகமாக விற்பனை செய்தல் கூடாது.

சமீபகாலமாக பொட்டலமிடப்படும் பொருட்களில் சட்ட ரீதியான அறிவிக்கைகள் காணப்படாதது தொடர்பாகவும், பொட்டலப் பொருட்களில் குறிப்பிடப்பட்ட விலைக்கு அதிகமாக விற்பனை செய்வது தொடர்பாகவும் புகார்கள் பெறப்பட்டுள்ளன.

எனவே மேற்படி புகார்களை உடனடியாக தீர்க்கும் வகையில் முதன்மை செயலாளர் / தொழிலாளர் ஆணையர் திரு. கா. பாலச்சந்திரன், இ.ஆ.ப., அவர்களின் ஆணைக்கிணங்க, சட்டமுறை எடையளவு கட்டுப்பாட்டு அதிகாரி திரு. தி. குமரன் அவர்களின் அறிவுறுத்தலின் படி ஜனவரி மாதத்தில் தமிழகத்தில் உள்ள அனைத்து பல்பொருள் அங்காடிகளில் சட்டமுறை எடையளவு சட்டம் மற்றும் பொட்டலப் பொருட்கள் விதிகளின் கீழ் அனைத்து தொழிலாளர் உதவி ஆணையர்கள் (செயலாக்கம்) தலைமையில் சம்மந்தப்பட்ட தொழிலாளர் உதவி ஆய்வர்கள் மூலம் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. பொட்டலப் பொருட்கள் சட்ட விதிகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட 12,083 ஆய்வுகளில், பல்பொருள் அங்காடிகளில் மட்டும் 532 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு 179 முரண்பாடுகள் கண்டறியப்பட்டது. இதையடுத்து, அந்த கடைகளின் உரிமையாளர்களுக்கு இணக்க கட்டண அறிவிப்பு வழங்கப்பட்டு அபராத தொகை வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நுகர்வோர் நலன் காக்கும் பொருட்டு இது போன்ற ஆய்வுகள் தமிழ்நாடு முழுவதும் பிரதி மாதம் முதல் மற்றும் மூன்றாம் வாரங்களில் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் மற்றும் முரண்பாடுகள் கண்டறியப்படும் நிறுவனங்கள் மீது சட்டவிதிகளின் படி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**